[2010 நவம்பர் 12

பிற்பகல் 1-35

(ஐ) தமிழ்நாடு தமிழ் மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2010), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரதான எதிர்கட்சியின் சார்பாக திரு. வி.பி. கலைராஜன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் சில திருத்தங்கள் கொண்டுவரவேண்டும் என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம். பேசுங்கள். (குறுக்கீடு) அடுத்ததாக

@ 10–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

clause-by-clause consideration-ல்தான் திருத்தம். (குறுக்கீடு) திருத்தங்கள் மொழிவது அடுத்த கட்டத்தில்தான். உட்காருங்கள். இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. கலைராஜன், நீங்கள் திருத்தம் சொல்வதாக இருந்தால் அந்தப் பிரிவு சம்பந்தமாக எடுத்துக்கொள்ளும்பொழுதுதான் சொல்லவேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுத் துறையில் அனைத்து இடங்களிலும் 20% வேலைவாய்ப்பில் ஒதுக்கிவைத்து அதற்கு முன்னுரிமை தருகின்ற இந்தச் சட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். அதே நேரத்தில், 2010-ல் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. ஏற்கெனவே தமிழ் வழியில் படித்திருக்கின்றவர்களுக்கும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்கின்ற அடிப்படையிலும், மேலும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருக்கின்ற சீனியாரிட்டி பட்டியல் என்ற அடிப்படையில் வருகின்றபொழுது இந்த 20% என்பது, அந்தப் பணிகளுக்கு தேர்வு வரும்போது இடம் குறைவாக இருந்தால் அவற்றையும் சீனியாரிட்டி என்பதை overlook செய்து தமிழ் வழியில் படித்திருந்தால் அதையே தகுதியாகக் கொண்டு அவர்களுக்கான வேலைவாய்ப்பினை வழங்க அரசு முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த தமிழ் ஆர்வத்தைத் தமிழக மக்கள் அனைவரிடத்திலும் கொண்டுவருகின்ற வகையிலும் தமிழகம் முழுவதும் இந்த 20% என்பதை 50% ஆக உயர்த்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் வலியுறுத்துகிறோம். தமிழ்நாட்டில் 69 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையான வேலைகள் பல்வேறு தொழிற்சாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேறுவிதமான வேலைவாய்ப்பு முறை

[திரு. தி. வேல்முருகன்] [2010 நவம்பர் 12

இருக்கிறது. அதாவது பல்வேறு தனியார் நிறுவனங்களிலே நுனி நாக்கு ஆங்கிலம் பேசுபவர்களை மட்டும்தான் வேலைக்கு எடுக்கும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்குவதற்கு ஏற்றவாறு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தனியார் துறைகளிலும் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்து, அவர்களுக்கும் இதுபோன்று 20% முதல் 50% வரை வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு முன்வரவேண்டும், அதற்கான ஒரு திருத்தத்தையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன், நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் திருத்தத்தில் பேசவேண்டும் என்று சொல்கிறீர்கள். அதற்கு இப்போது வாய்ப்பில்லை. இப்போது நீங்கள் Bill-ல் பேசவேண்டுமென்றால் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவினை காங்கிரஸ் பேரியக்கம் வரவேற்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தில், பொதுவாக தமிழுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலை பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், அருமை அன்னை சோனியா காந்தி அவர்களும், தமிழகத்தில் டாக்டர் கலைஞர் அவர்களும் செய்த முயற்சியின் காரணமாக இப்பொழுது தமிழ் மொழி, செம்மொழி என்கின்ற அந்த அந்தஸ்தை முதன் முதலில் பெற்று இன்று பீடுநடை போட்டுக் கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில், அதற்கான ஒரு மாநாட்டையும் நடத்தி முடித்திருக்கின்ற முதல்வருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆனால் இந்தச் சட்டத்தைப் பார்த்தோம் என்றால் "கீழ்க்கண்ட பணிகள்" என்று இந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், எந்தெந்தப் பணிகள் என்று சரியாக இதிலே பட்டியலிடப்படவில்லை என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2010 நவம்பர் 12] [திரு. சி. ஞானசேகரன்]

பிற்பகல் 1-40

இந்தச் சட்டத்தில் 5-வது பிரிவில் பார்த்தோமென்றால், "3 ஆம் பிரிவின்கீழ் தமிழ் மொழிமூலமாகப் படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலான நியமனமானது..." என்று குறிப்பிடுகிறீர்கள். இதிலே முன்னுரிமை ஏற்கெனவே படித்தவர்களுக்கு மட்டுமா, படித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு மட்டுமா, அல்லது இனிமேல் படிக்கப் போகிறவர்களுக்கா என்கிற ஒரு சந்தேகம் வருகிறது. ஆகவே, அதையும் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் நாம் ஒரு தகுதியை வைக்கிறபோது, qualification என்று வைக்கிறபோது, அதை எப்படி இந்த அரசு எடுத்துக்கொள்ளப்போகிறது என்பதையும் மிகத் தெளிவாக குறிப்பிட்டு, இதிலே எப்படியாவது தமிழ் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழிலே படித்த பல பேர் இன்று தமிழ்நாட்டிலே வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை நாம் போக்கவேண்டும் என்பதைத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும் அதேபோல நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே படித்துவிட்டவர்கள் ஏராளமாக வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் வயது வரம்பைத் தளர்த்தினால்தான் அவர்கள் பணிக்கே செல்ல முடியும். ஆகவே, ஏற்கெனவே தமிழ் படித்தவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தியாவது, ஒரு வாய்ப்பினை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும்; அதற்கும் இந்தச் சட்டத்தில் நீங்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இப்போது 20 சதவிகித இட ஒதுக்கீட்டை நீங்கள் கொடுக்கிறீர்கள். ஏற்கெனவே தமிழ் வளர வேண்டும், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லக்கூடிய நாம், 20 சதவிகிதத்தை வைத்துக்கொண்டு மட்டுமே இப்படிச் செய்தால் மீதி 80 சதவிகிதம் மற்றவர்கள் வந்துவிடுவார்கள். ஆகவே, தமிழ் படித்தவர்களுக்கு நீங்கள் குறைந்தபட்சம் 50 சதவிகிதத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு தமிழ்நாட்டிலேகூட வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்று சொன்னால், அவர்கள் மற்ற மாநிலங்களில்

[திரு. சி. ஞானசேகரன்] [2010 நவம்பர் 12

நிச்சயமாக பெறவே முடியாது. மற்ற மாநிலங்களில் தமிழை யாரும் மதிப்பதும் இல்லை. அங்கே வேலை கொடுப்பதும் இல்லை. ஆகவே, அப்படி இருக்கக்கூடிய சூழலில் நீங்கள் எல்லாவற்றிலும் தமிழைப் புகுத்திவிட்டு, தமிழ்தான் வளர வேண்டும், தமிழ் வாழ்க என்று சொல்லிவிட்டு, இங்கே தமிழ் படித்தவர்களை தமிழ்நாட்டிலே வேலையில்லாமல் அலையவிட்டால் அது சரியாக இருக்காது என்கிற காரணத்தினாலே, எப்படியாவது, முழுமையாக அவர்களுக்குப் பணி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று; இட ஒதுக்கீடு சம்பந்தமாக 50 சதவிகிதத்திற்குமேல் கொடுக்கக்கூடாது என்று ஏற்கெனவே ஒரு நியதி இருக்கிறது. இங்கே ஏற்கெனவே 69 சதவிகித இட ஒதுக்கீட்டை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் 20 சதவிகிதம் அதோடு போட்டிப் போடுகிறபோது, உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன பாயின்ட் என்று சொல்லுங்கள். பாயின்டை விட்டு விட்டு, சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறீர்களே?

திரு. சி. ஞானசேகரன்: சில சட்ட நிபுணர்கள் இந்த 20 சதவிகிதம்கூட அடிபட்டுப் போய்விடும் என்று சொல்கின்றார்கள். இதைக் காப்பாற்றுவதற்கு எப்படியாவது நீங்கள் முழு முயற்சி எடுத்து மத்திய அரசிடம் சொல்லி அந்த அரசியல் சாசன அட்டவணையில் சேர்க்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, அல்லது இங்கேயே வேறு வழிவகை சொன்னாலும் சரி, எப்படியாவது தமிழ் படித்தவர்களுக்கு வேலை நிச்சயமாகக் கிடைக்கும் என்கிற உறுதியை நீங்கள் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டு இந்த சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, ஒரு கட்சியிலே ஓர் உறுப்பினர் சொன்னால் போதாதா? எல்லாம் ஒன்றுதானே?

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் நீண்டநாள் எதிர்பார்த்த சட்டம். எல்லோராலும் வரவேற்கப்படக்கூடிய சட்டம். ஆனால், எங்களுக்கு எழக்கூடிய சந்தேகம் என்னவென்றால், இப்பொழுது தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் 20 விழுக்காடு முன்னுரிமை என்று சொல்கிற நேரத்தில், இது எல்லாத் துறைகளிலும், எல்லாப் பணி நிலைகளிலும்

2010 நவம்பர் 12] [திரு. ஜி.கே. மணி]

வழங்கப்படுமா? அது குறிப்பிடப்படவில்லை. தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாத் துறைகளிலும் (குறுக்கீடு) என் பேச்சைக் கேட்டுவிட்டு பிறகு பதில் சொல்லுங்கள். எல்லாத் துறைகளிலும் எல்லாப் பணி நிலைகளிலும் வழங்கப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. அதுமட்டுமல்ல. 20 விழுக்காடு வழங்கிவிட்டு, மற்றும் இருக்கிற 80 விழுக்காடு தமிழ் படிக்காதவர்களுக்கு போய்விடக்கூடாது. அதிலும் அரசு உறுதியாக இருக்க வேண்டும். தமிழைப் படித்தவர்களுக்கு 20 விழுக்காடுதான் என்று சொன்னால், மீதி அவர்களுக்கு இல்லை என்று ஆகிவிடக்கூடாது. ஆகவே, தமிழில் படித்தவர்களுக்கு முன்னுரிமை என்பது 20 விழுக்காடு என்றால் மீதி மற்றவர்களுக்கு போய்விடக்கூடாது என்ற அந்த நிலையை உருவாக்குவதோடு, இது அரசுப் பணிகளில் மட்டுமல்ல, தனியார் பணிகளிலேயும் வந்தால்தான் தமிழ் மேலோங்கும், தமிழ்நாடு வளரும் என்ற அடிப்படையிலே சட்டத் திருத்தம் தேவை என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க முடிவு செய்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது. 20 சதவிகிதம் என்று இருப்பதைக்கூட தற்போது ஏற்கிறோம். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், இந்தக் கோரிக்கை குறித்து தொடர்ந்து பேசியிருக்கின்றோம். கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டிற்கு முன்பாகவும்கூட, மாநாட்டில் நாம் சிந்திக்க வேண்டிய கருத்துகள் என்கிற வகையில் இதனை வலியுறுத்தியிருக்கிறோம். அந்தக் கேள்விக்கு இன்றைக்கு விடை கிடைத்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழகத்தில் நம்முடைய பிள்ளைகள் தமிழ் வழியில் பயின்றால், எதிர்காலம் பாழாகிவிடுமோ என்று பாட்டாளி மக்கள் எல்லாம் அஞ்சிக்கொண்டு, கொள்ளை இலாபம் அடிக்கக்கூடியவர்களிடம் பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டு, அந்தக் கல்லூரி நிருவாகங்கள், பள்ளி நிருவாகங்கள் முன்பாக, பரிதவித்துக்கொண்டு போராடிக் கொண்டிருக்கின்ற வேளையில், தமிழகத்தில் தமிழாய்ந்த தமிழ் மகன்தான் ஆளுதல் வேண்டுமென்ற பாவேந்தர் கூற்றுக்கு இணங்க,

[திரு. என். நன்மாறன்] [2010 நவம்பர் 12

ஆளுதல் வேண்டும் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், தமிழ் வழியில் பயின்றவர்கள் தமிழகத்தில் வாழ்தல் வேண்டுமென்று வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்று அமர்கின்றேன்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கின்றேன். நேற்று பேசுகின்றபோது எங்களது ஒப்பற்ற தலைவர் ஜீவா அவர்கள் கூறியதை குறிப்பிட்டுச் சொன்னேன். 1955 ஆம் ஆண்டிலேயே இந்தப் பேரவையிலே அவர் பேசியிருக்கிறார். தமிழ் தெரிந்தால் போதும். அவர்கள் ஆட்சியில் ஆளலாம். ஐ.ஏ.எஸ். ஆகலாம்; நீதிபதியாகலாம். எந்தத் துறையிலே வேண்டுமானாலும் பணியாற்றலாம் என்ற நிலை வரவேண்டுமென்பது சபையிலே அவரே குறிப்பிட்டுச் சொன்ன செய்தி. என்ன துரதிருஷ்டம் என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாட்டில், நம்முடைய தமிழ் மொழி சார்ந்த நமக்கே, தமிழுக்கே, இட ஒதுக்கீடு செய்கின்ற கட்டாயம் வருகின்றதே என்பதுதான் வேதனை. அன்னிய மொழியினுடைய ஆதிக்கம் நம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்ததன் விளைவு, இதற்கு இப்படியொரு தீர்வுகாண வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குத் தீர்வு காண்பதற்காக கொண்டுவந்திருக்கின்ற சட்டம், முழுமையாக ஆதரிக்கப்படவேண்டிய சட்டம். இதில் ஒதுக்கீடு என்ற அளவு 20 சதவீதம் என்பது, 50 சதவீதமாகவும் இருக்கலாம் அல்லது 75 சதவீதமாகவும்கூட இருக்கலாம். தமிழ் அப்போதுதான் வாழும். தமிழர்களும் அப்போதுதான் வாழ்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு என்பது 20 சதவீதம் என்று இன்றைக்கு இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற உறுப்பினர்கள் பேசியதைப்போல, இன்றைக்கு நம்முடைய தமிழ் மாநிலத்திலே, நாம் எடுத்துக்கொள்வதுதான் அதிகமாக இருக்கவேண்டும். நம்முடைய வீட்டில் நமக்கு 20 சதவீதம்தான் இடம், மற்றவர்களுக்கு 80 சதவீதம் இடம் என்பது ஏற்றுகொள்ளமுடியாததாக இருக்கிறது.

2010 நவம்பர் 12] [திரு. வி.பி. கலைராஜன்]

இந்தச் சட்டத்திலே 80 சதவீதம் என்பது நம்முடைய தமிழ் படித்தவர்களுக்கு அவசியம் தரவேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே உயர் நீதிமன்றத்திலே தமிழிலே பேச முடியாத நிலைதான் இன்றைக்கும் நீடித்துக்கொண்டிருக்கிறது. அதைப்போல, நீங்கள் அவசரத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். ஏற்கெனவே வர்த்தக நிறுவனங்களின் பெயர்கள் எல்லாம் தமிழிலே இருக்கவேண்டுமென்று நீங்கள் சொன்னீர்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னீர்கள். அதில் இதுவரை எந்த வெற்றியும் கிடைத்ததாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், முதல்வருடைய குடும்பத்தைச் சேர்ந்த திரைப்பட நிறுவனங்களின் பெயரே, Red Giant, Cloud Nine என்று இப்படித்தான் ஆங்கிலத்தில் வைத்திருக்கிறீர்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால்—குற்றம் சுமத்துவதற்காகச் சொல்லவில்லை—அந்த வர்த்தக நிறுவனங்கள் பெயரைக்கூட தமிழிலே மாற்ற முடியவில்லை. கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் 3.5 சதவீதம் இட ஒதுக்கீடு தருவதாக நீங்கள் சொன்னீர்கள். அந்தச் சட்டம் வெற்றி பெறவில்லை. அந்தக் கிறிஸ்தவ மக்களே உங்களிடத்திலே வந்து, "நீங்கள் அவசரத்திலே போட்டுவிட்டீர்கள். எங்களுக்கு அது வேண்டாம்" என்று சொன்னார்கள். எனவே நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற சட்டத்தை நல்ல முறையில் நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். தமிழகத்திலே இருக்கின்ற மக்கள், தமிழ் மக்களுக்கு தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழிலே படிக்கின்றவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்துகின்றேன். இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்குக்கூட தமிழர்களைப் பயன்படுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இட ஒதுக்கீட்டு முறையில் Medium of Instruction அடிப்படையில் அந்த சதவீதத்தை கணக்கிட்டு, அதுவும் பள்ளிக் கல்வியில், எத்தனை சதவீதம் மாணவர்கள் தமிழில் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு, 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழில் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில்கொண்டு, இந்த ஒதுக்கீட்டில் தாய்மொழியைத் தமிழாகக் கொண்டிருப்பவர்களையும்

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்] [2010 நவம்பர் 12 கணக்கிட்டு, 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட அளவுக்கு இட ஒதுக்கீட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வழியில் படிக்கின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் வெகுநாட்களாக கோரிக்கை விடுத்துவந்தோம். இப்போது இயற்றப்படுகின்ற இந்தச் சட்டத்தை நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றோம், வரவேற்கின்றோம். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போது, தமிழ் வழியிலே மேல்நிலைக் கல்வி வரை தொடர்ந்து படிக்கின்ற மாணவர்களுக்குத்தான் இது பொருந்தும் என்று நாம் கொண்டுவரவேண்டும். அப்போதுதான் இந்தச் சட்டத்தினுடைய முழுமையான பலன் அவர்களுக்குக் கிடைக்கும். அதுபோலவே, இப்போது தமிழ் வழியிலே மேல்நிலைக் கல்வி படிக்கின்ற மாணவர்கள்தான் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றார்கள். அவர்கள் எத்தனை விழுக்காடு இருக்கின்றார்களோ அத்தனை விழுக்காடு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டால்தான் அது சம நீதியாக, சமூக நீதியாக இருக்கும். எனவே, அந்தத் திருத்தத்தை பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2010 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடு)

மாண்புமிகு அமைச்சர் இறுதியில் சேர்த்தும் பதில் சொல்லலாம்.

பிரிவுகள் 3 முதல் 8 வரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவுகள் 3 முதல் 8 வரை, திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் அவையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரின் திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பிரிவுகள் 3 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 9 மற்றும் 10, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 9 மற்றும் 10 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2010 நவம்பர் 12

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது என்கின்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவை, இந்த மாமன்றத்திலே கொண்டுவந்து அதை நிறைவேற்றுகிற அருமையான வாய்ப்பை வழங்கிய நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் நிறைவு விழாவில் உரையாற்றுகிறபோது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை அளித்திட உரிய சட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். சொன்னதைச் செய்கிறவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தச் சொல்லுக்குப் பயனாக இன்றைக்கு இந்த மசோதா இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டு, மாமன்றத்தினுடைய ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றது. இந்தச் சட்டமுன்வடிவை, மாமன்றத்தில் இருக்கிற கட்சிகள் அனைத்தும் வரவேற்றன. உறுப்பினர்கள் யோசனை சொன்னார்கள். வாழ்த்துகிறபோது இரண்டுவிதமாக வாழ்த்துவார்கள். மணமக்களை—விருப்பத்தோடு வாழ்த்தினால், "வாழ்க! வாழ்க! வாழ்க! நன்றாக இருங்கள், நன்றாக இருங்கள்." என்று சொல்வார்கள். வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்த்துகிறவர்கள் "நன்றாக இருங்கள், நன்றாக இருங்கள்" என்று கூறிவிடுவார்கள். அப்படி இரண்டுவிதமான வாழ்த்தையும் நான் இந்த மன்றத்திலே பார்த்தேன். அது தமிழ் மீதுள்ள வெறுப்பல்ல,

2010 நவம்பர் 12] [திரு. துரைமுருகன்]

எங்கள் மீதுள்ள வெறுப்பு. ஆனால், ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு புனிதமான நாள். இது தமிழ்நாடு; நாம் தமிழர்கள், தமிழ் படிக்கிறோம். ஆனால், தமிழனுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோமே என்று எண்ணுகிறபோது வருத்தம். ஆனால், அந்த வரலாற்றைப் படைத்தவர் கலைஞர் என்கிறபோது பெருமிதம். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னைப் பொறுத்தவரையில், இது ஒரு சட்டமுன்வடிவு என்பதைவிட, தமிழ் படித்தவர்களுக்கு கிடைத்திருக்கின்ற ஒரு 'Magna Carta'. அதைக் கல்லூரியிலே படித்திருக்கிறேன். படித்தவர்களுக்குத் தெரியும். தமிழ் மீடியம் படித்தவர்களைப் பார்த்தாலே ஒரு மாதிரியாக நினைப்பார்கள். "Are you studying in Tamil medium? No, No. I am not a Tamil medium student என்பார்கள். தமிழ்வழி படிக்கிறீர்களா என்றுகூடக் கேட்க மாட்டார்கள். அந்தத் தமிழ் மீடியம் படித்தவர் யார் என்று பார்த்து வேலை கொடுக்கும்போது கலைஞர், "Are you a Tamil medium candidate, come first வா! நீ முதலில் வா!' அப்படியென்று கூப்பிட வைத்துவிட்டார். அதுதான் கலைஞர்.

பிற்பகல் 1-55

தமிழுக்கு அளப்பரிய தொண்டுகளைச் செய்திருக்கிறவர் கலைஞர். எத்தனையோ திட்டங்களை இங்கே நிறைவேற்றியிருக்கிறார். இந்த மாமன்றம், வரலாற்றுச் சிறப்புமிக்க பல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. அறிஞர் அண்ணா சொன்னார், "இந்த நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கிறேன். அது ஒரு தீர்மானம். இந்த நாட்டில் ஆங்கிலம், தமிழ் என்ற இரு மொழிக் கொள்கைதான் இருக்கும் என்பது இரண்டாவது தீர்மானம். மூன்றாவது தீர்மானம், சுயமரியாதைத் திருமணங்களை சட்ட வடிவம் ஆக்குகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்தத் தீர்மானத்திலே பேசுகிறபொழுது, "நான் எதைச் சாதித்தேனோ இல்லையோ, இந்த மூன்றையும் நிறைவேற்றியிருக்கிறேன்; இந்த மூன்றையும் மறுத்து, மாற்றுகிற தைரியம் எவருக்கும் தமிழ்நாட்டிலே கிடையாது" என்று அவர்கள் சொன்னார்கள். அதேபோன்றுதான் இன்றைக்கு நிறைவேற்றுகிற இந்தச் சட்டத்தை மாற்றுகிற தைரியம் யாருக்கும் கிடையாது. அது கலைஞர் நிறைவேற்றியிருக்கிற ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. துரைமுருகன்] [2010 நவம்பர் 12

தமிழுக்கு அளப்பரிய தொண்டுகளை ஆற்றியவர் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள். சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும் பொங்கருவி நடையும் தமிழுக்குப் புது நடையும் எழுத்தின்மூலம், பேச்சின்மூலம் தந்தவர். குறளுக்கு விளக்கத்தை எழுதியவர். குறளுக்கு ஓவியத்தையும் தீட்டியவர். சங்கத் தமிழை, சாமானியர்களுடைய தாழ்வாரத்திலும் தவழவிட்டவர். தொல்காப்பியத்திற்குப் பூங்கா அமைத்து அந்தப் பூங்காவிலே மலர்கின்ற அந்த மலரின் மகரந்தத்தில், தமிழ்ச் சுவையை, இனிமையை ஊட்டியவர். கலியரங்கங்களை பொதுமக்கள் மத்தியிலே கொண்டுவந்து நடமாட விட்டவர். அறிஞர் அண்ணா ஒரு முறை, "புலவர் மாடியிலேதான் சங்க இலக்கியம் இருக்கும்" என்று சொன்னார். "எட்டாத சுவருக்கு எட்டடி சுவர் எழுப்பி, 'உள்ளே ஆடுது காளி, வேடிக்கைப் பார்க்க வாடி" என்பதைப்போல், "தொல்காப்பியத்தைப் பாரீர், அதன் தொன்மையைக் கேளீர்" என்று புலவர்கள் சொல்லிக்கொண்டிருந்ததை மாற்றி, பூங்காவாக மாற்றியவர் நம்முடைய முதல்வர் அவர்கள்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் இருக்க வேண்டுமென்பதற்காக பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கக்கூடியவர். தமிழுக்கு செம்மொழி என்கிற தகுதி இருந்தும், தமிழன்னை நீண்ட நாட்களாக அந்தத் தகுதியைப் பெறாமல் இருந்தாள். அதை மத்தியிலே இருக்கிற ஆட்சியின்மூலம் அன்னை சோனியா அவர்களும், பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் பெரும் மனது வைத்து, முதல்வருடைய கோரிக்கையை ஏற்று, தமிழுக்கு 'செம்மொழி' என்கிற ஓர் அந்தஸ்தைத் தந்தார்கள். கலைஞர் நன்றி தெரிவித்தார். நன்றிக்கு அந்த அம்மையார் பதில் எழுதினார்கள். அதுகுறித்து அன்னை சோனியா அவர்கள் கடிதம் எழுதியபொழுது, 'இதை நாங்கள் யார், யார் செய்தாலுங்கூட, தமிழ்ச் செம்மொழி ஆனதற்கு முழுப் பெருமை, முழுப் புகழ் உங்களைத்தான் சாரும்' என்று அம்மையார் அவர்கள் பெருந்தன்மையோடு எழுதினார்கள். அப்படித் தமிழைச் செம்மொழி ஆக்கியவர் கலைஞர் அவர்கள். தமிழ் எல்லாவற்றிலும் இருக்கிறது. ஆனாலும் தமிழ்நாட்டிலே தமிழ் குறித்து ஒரு பாடல் இல்லை. அதற்கென்றும் "நீராருங் கடலுடுத்த" என்ற பாடலைக் கொடுத்தவரும் அவர்தான். அதைப்போலத்தான் பல தொண்டுகளை ஆற்றிய கலைஞர் இன்றைக்கு இந்தத் தீர்மானத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றவுள்ளார். (குறுக்கீடுகள்) அவர்தான் கொண்டுவந்தார். மனோன்மணீயத்திலிருந்து எடுத்துக்

2010 நவம்பர் 12] [திரு. துரைமுருகன்]

கொண்டு வந்து, இதை தமிழக அரசுப் பாடலாய், தமிழ்த் தாய் வாழ்த்தாக மாற்றலாம் என்று மாற்றிவிட்டார். ஆகையினால், அதையும் அவர்தான் செய்திருக்கிறார். ஆகவே, இவ்வளவும் செய்த கலைஞரால் தமிழ் படித்தவனுக்கு ஒரு பெரும் மரியாதை; தமிழ் படிக்கிறேன் என்று சொல்வதிலே ஒரு கர்வம் ஏற்படுகிற அளவுக்கு இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவை இந்த மாமன்றத்திலே படைக்க வைத்திருக்கிறார்கள்.

இங்கே பேசிய நண்பர்கள் பல கருத்துகளைச் சொன்னார்கள். இதிலே என்னென்ன அரசு வேலைகளில் முன்னுரிமை என்று திரு. ஞானசேகரன் கேட்டார், எல்லாவற்றுக்கும் எடுத்துக்கொள்ளலாம். அரசாங்கத்திற்கு சம்பந்தப்பட்ட வேலைக்கு ஆள் எடுக்கிறபோது அவர்களுக்கு அந்த 20 சதவிகிதம் இருக்கும். "services under the State; includes the services under-(i) the Government; (ii) the Legislature of the State; (iii) any local authority; (iv) any Corporation or Company owned or controlled by the Government; and (v) and any other authority in respect of which the State Legislature has power to make laws;" என்று தெளிவாக சட்டமுன்வடிவில் பிரிவு 2-ல் (f) போட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, I am not well versed in English. அதற்காக நான் சொல்லவில்லை. எடுத்தேன், டக்கென்று இது கையில் வந்தது. அதைப் படித்தேன்.

பிற்பகல் 2-00

இரண்டாவது, நான் ஒன்றை ஒத்துக்கொள்கிறேன். நான் English medium மூலம் படித்தவன். ஆனாலும், தமிழ் வேண்டும் என்பதுதான். அதனால், அதிலே ஒன்றும் பிரச்சினையில்லை.

மூன்றாவதாக, இங்கே சொன்னார்கள்; ஒதுக்கீடு 20 சதவிகிதம்தானே கொடுக்கிறீர்கள்; இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்; கொடுக்கலாம். திரு. வேல்முருகன் அவர்கள் சொன்னார்கள்; திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள்; இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று எல்லோரும் சொன்னார்கள்; கொடுக்கலாம். ஆனால் என்ன ஆகும் தெரியுமா? சட்டத்திலே உள்ள சில நெளிவு சுழிவுகளைப் பார்க்க வேண்டும். நாங்கள், கிராமப்புறத்திலே படித்த இளைஞர்களுக்கு 5 மதிப்பெண்களை இன்டர்வியூவிலே போடவேண்டுமென்று

[திரு. துரைமுருகன்] [2010 நவம்பர் 12

சொன்னோம். கிராமத்திலே உள்ள நிறைய பேர் படித்துவிட்டு வந்தார்கள். பிறகு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. அதை எப்படிடா செய்வது என்று பார்த்தார்கள். (குறுக்கீடு) அப்படிப்பட்ட பெரிய வார்த்தை நாம் ஏன் சொல்ல வேண்டும்? அவர்கள் 25 சதவிகிதம் என்று சொன்னார்கள் பாருங்கள், உடனே கோர்ட்டிலே அதை அடித்துவிட்டார்கள். ஆக, எப்படியோ காரியம் முடிந்துபோய்விட்டது. அந்த மாதிரி இதை முடிப்பதற்கு தமிழ் எதிரிகள் சில பேர் இருக்கிறார்கள் என்பதையும் இந்த அரசு மனதிலே, கவனத்திலே கொண்டுதான், "my steps are measured" என்று அண்ணா அவர்கள் சொன்னதைப்போல், கொஞ்சம் கொஞ்சமாக வரும். ஒரு காலம் வரும். 20 சதவிகிதம் அல்ல; 100 சதவிகிதமும் தமிழில் படித்தவர்களுக்குத்தான் என்ற நிலை வந்தே தீரும். இதை யாரும் இனிமேல் தடுத்து நிறுத்த முடியாது.

அடுத்து, இதிலே இருக்கின்ற பிரச்சினை ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். Communal rotation இதன்மூலம் பாதிக்காது. இன்டர்வியூவிலே தமிழில் படித்தவன் இந்த 20 சதவிகித ஒதுக்கீட்டில்தான் வந்தாக வேண்டுமென்றில்லை; 20 சதவிகிதத்தில்தான் தமிழில் படித்தவர்கள் வரவேண்டும் என்றில்லை. அவனுக்கு talent இருந்தால், general-ல்கூட வந்துவிடலாம். அதேமாதிரி, தமிழில் படித்தவர்கள் வரவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள்; அவனுக்காக அந்த இடத்தைக் காலியாக வைக்க முடியாது. அந்த இடத்தைக் கொடுத்துவிடுகிறோம். இன்னொன்றும் சொல்கிறோம். நம்முடைய ஞானசேகரன் அவர்களும் சொன்னார்கள். இந்த Communal rotation பாதிக்கப்படாது. இந்த preferential basis-லே—preferential basis-என்று ஆங்கிலத்தில் நான் சொல்வதைத் தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம்—முன்னுரிமை அடிப்படையில்தான் நாங்கள் எடுக்கிறோம். Vertical, horizontal என்று இரண்டு analysis இருக்கின்றன. Horizontal-ல் எடுக்கிறபோது, பாதிக்கப்படாது. Vertical—ல் எடுத்தால்தான் பாதிக்கும். ஆகையினால், Communal rotation G.O.-வையும் இது பாதிக்காது. வேறெந்த நிலையும் ஏற்படாது. எனவே, தமிழில் படித்த மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கும். இது தமிழுக்கு ஓர் ஆரம்பம். எனவே, தமிழனை, தமிழ் மொழியை, தமிழ்நாட்டின் பெருமையை உயர்த்தி நிறுத்த வேண்டுமென்ற உணர்வோடு இந்த 87 வயதிலேயும் இருக்கின்ற முதல்வரை இந்த மாமன்றம் வாழ்த்தி வரவேற்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

2010 நவம்பர் 12] [திரு. துரைமுருகன்]

இந்தச் சட்டமுன்வடிவை உங்களுடைய பெருத்த ஆதரவோடு நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையாற்றும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வயதைப்பற்றிச் சொல்லும்போது, 57 என்று சொல்லிவிட்டேன். எங்களுக்கு எப்பொழுதுமே அவர் இளமையாகத்தான் தெரிகிறார். அதனால் அப்படிச் சொன்னேன். அதை 87 என்று திருத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 87 என்றுதான் நீங்கள் சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: 87 என்றுதான் சொன்னேனா? அப்படியென்றால், மாண்புமிகு திரு. வீராசாமி அவர்களுக்குச் சரியாகக் கேட்கவில்லைபோல் இருக்கிறது. (சிரிப்பு)

(ஒ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2010), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.